நகராட்சி அலுவலகம்,
களக்காடு.

நாள். 26.10.2023.

களக்காடு நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2023ம் வருடம் அக்டோபர் மாதம் 31ம் தேதி செவ்வாய் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

**முன்னிலை: திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்**
**களக்காடு நகராட்சி.**

| நாள். | தீர்மான எண். | மன்ற பொருள் | மன்றத்தின் முடிவு |
|---|---|---|---|
| 31.10.2023 | 367 | **<u>பொருள் எண். 01</u>**<br>களக்காடு நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பிறப்பு, இறப்பு ஆகியன பிறப்பு இறப்பு பதிவாளரால் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வரப்படுகிறது. மேலும் பிறப்பு இறப்பு ஆகியனவற்றில் உரிய சட்டவிதிகளின்படி பிழை திருத்தமும் செய்து வழங்கப்படுகிறது. இத்தகைய சேவைகளுக்காக குறைந்த பட்சம் ரூ. 200/- வசூலிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |
| 31.10.2023 | 368 | **<u>பொருள் எண். 02</u>**<br>இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒப்பந்ததாரரிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் வருமான வரித் தொகை மற்றும் சரக்கு மற்றும் சேவை கட்டணங்களை உரிய தலைப்பில் செலுத்த தனியார் நிறுவனம் மூலம் தயாரித்து வழங்கியமைக்காக சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் (Relywin Tax info service, kovilpatti) கேட்பு படி ரூ. 7500/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். சம்பந்தப்பட்ட நிறுவனமான ரிலைவின் டேக்ஸ் இன்போ சர்வீஸ், கோவில்பட்டி என்ற நிறுவனத்திற்கு தொகையினை வழங்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 31.10.2023 | 369 | **<u>பொருள் எண். 03</u>**<br>களக்காடு நகராட்சியில் நகராட்சிகளின் மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் டெங்கு தடுப்புப் பணிகள் குறித்து 14.09.2023 அன்று நேரடி ஆய்வு மேற்கொண்ட நிலையில் மேற்கண்ட டெங்கு தடுப்பு பணிகளை மேற்கொள்ள கூடுதல் களப்பணியாளர்களை நியமனம் செய்ய அறிவுரை வழங்கப்பட்டது. எனவே கூடுதலாக டெங்கு தடுப்பு களப்பணியாளர்களை தற்காலிகமாக நியமிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். பருவமழை காலமாதலால் இந்நகராட்சியில் ஏற்கனவே உள்ள 20 டெங்கு தடுப்பு பணியாளர்களுடன் கூடுதலாக 20 நபர்களை தற்காலிகமாக நான்கு மாதங்களுக்கு (அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி) மட்டும் நியமிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |
| 31.10.2023 | 370 | **<u>பொருள் எண். 04</u>**<br>களக்காடு நகராட்சிக்கு தேவையான எழுது பொருட்களை கொள்முதல் செய்ய ரூ. 5.00 லட்சத்திற்கு ஏற்கனவே மன்றம் அனுமதியளித்துள்ளது. இந்நிலையில் கூடுதலாக எழுது பொருட்கள் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளதால் கூடுதலாக ரூ.3.00 லட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | அரசு விலைக்கு உட்பட்டு கொள்முதல் செய்ய அனுமதிக்கப் படுகிறது. |
| 31.10.2023 | 371 | **<u>பொருள் எண். 05</u>**<br>களக்காடு நகராட்சிக்கு சொந்தமான வாகன எண். TN72AU3639-ற்கு தகுதி சான்று காலம் முடிவடைந்துள்ளதால், மேற்கண்ட வாகனத்திற்கு தகுதி சான்றிதழ் புதுப்பிக்க தேவையான பழுது நீக்கப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிகளுக்கு ரூ. 48,000/- செலவாகும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 31.10.2023 | 372 | **<u>பொருள் எண். 06</u>**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 5, ஓதுவார் தெருவில் பேவர் பிளாக் சாலை மற்றும் கீழப்பத்தை தெருவில் பைப் லைன் அமைக்கும் பணிக்கு ரூ. 9.00 லட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட பணிகளுக்கான செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | அனுமதிக்கப் பட்டது. |
| 31.10.2023 | 373 | **<u>பொருள் எண்.07</u>**<br>களக்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான பிளிச்சிங் பவுடர், நீற்றிய சுண்ணாம்பு மற்றும் கொசு மருந்துகளான பைரித்திரம், மாலத்தியான், அபேட் ஆகியன கொள்முதல் செய்ய ரூ.2,77,900/- செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>பருவமழை காலமாதலால் மேற்கண்ட பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான கிருமி நாசினிகள் மற்றும் கொசு தடுப்பு மருந்துகள் அவசரமாக கொள்முதல் செய்ய வேண்டியிருந்ததால், நகராட்சி சட்டம் 1998 பிரிவு 57 (7)ல் நகராட்சி ஆணையருக்கு வழங்கப்பட்ட அனுமதியின் அடிப்படையில் மேற்கண்ட செலவினத்தை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். | அரசு விதிகளுக்கு ட்பட்டு கொள்முதல் செய்ய அனுமதிக்கப் பட்டது. |
| 31.10.2023 | 374 | **<u>பொருள் எண். 08</u>**<br>களக்காடு நகராட்சியில் அனுப்புகை பிரிவுக்கு தேவையான தபால் தலைகள் இருப்பு இல்லாததால் 2023-2024 நிதியாண்டுக்கு ரூ. 10,000/ மதிப்பிலான தபால் தலைகள் பெற்று இருப்பு வைத்து பயன்படுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட தபால் தலைகள் கொள்முதல் செய்ய தேவையான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 31.10.2023 | 375 | **<u>பொருள் எண். 09</u>**<br>களக்காடு நகராட்சிக்கு சொந்தமான TN72CV2767 எண் கொண்ட ஈப்பு வாகனத்திற்கு அவசர நிகழ்வாக ஆயில் நிரப்புதல் மற்றும் சிறு பழுது ஆகியவற்றிற்கு ரூ.3102/- செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:**<br>அவசரமாக மேற்கண்ட செலவினம் செய்ய வேண்டியிருந்ததால் நகராட்சி சட்டம் 1998 பிரிவு 57 (7)ல் நகராட்சி ஆணையருக்கு வழங்கப்பட்ட அனுமதியின் அடிப்படையில் மேற்கண்ட செலவினத்தை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |
| 31.10.2023 | 376 | **<u>பொருள் எண். 10</u>**<br>களக்காடு நகராட்சியில் 2023-2024ம் நிதியாண்டில் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்து பணியாளர்கள் மற்றும் டெங்கு தடுப்பு பணியாளர்கள் ஆகியோருக்கு தினக்கூலியாக ரூ.380/ வழங்கப்பட்டு வரப்படுகிறது. மேற்கண்ட பணியாளர்களுக்கு 2023-2024ம் நிதியாண்டிற்கான குறைந்தபட்ச தினக்கூலியாக ரூ. 480/ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.எம்3/3324/2023, நாள்.04.08.2023ன்படி குறைந்த பட்ச தினக்கூலியாக அட்டவணைப் படுத்தப்பட்ட இனங்களில் டெங்கு தடுப்பு பணியாளர்கள் மற்றும் திறனற்ற பணியாளர்களுக்கு தினக்கூலியாக ரூ.480/ வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் இக்கூடுதல் ஊதியம் வழங்க அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.கஎண். 678/2023/எச்1). | அனுமதிக்கப் பட்டது. |
| 31.10.2023 | 377 | **<u>பொருள் எண். 11</u>**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட பயனாளிகளுக்கான விண்ணப்பம் பெறுதல் தொடர்பாக வருவாய் துறை மூலம் அமைக்கப்பட்ட 11 முகாம்களில் நகராட்சி மூலம் அடிப்படை வசதிகள் செய்யும் பணிக்காக, உத்தேசமாக ரூ. 1.50 லட்சம் செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>கலைஞர் மகளிர் உரிமத்திட்டத்திற்கான ஒருங்கிணைப்பு துறையாக நகராட்சி நிர்வாக துறையினை | அனுமதிக்கப் பட்டது. |

<table>
<tr><td></td><td></td><td>ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் இந்நகராட்சி மூலம் மேற்படி திட்ட முகாம் நடைபெற்ற இடங்களில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதற்கான செலவின தொகையினை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>31.10.2023</td><td>378</td><td><u>பொருள் எண். 12</u><br>களக்காடு நகராட்சி அலுவலகத்தில் சொத்துவரி பெயர் மாற்றம் மற்றும் கசடு கழிவு மேலாண்மை திட்டத்திற்கான இடம் தேர்வு செய்ப்பட்டது தொடர்பாக ஏற்பட்ட தாவாவிற்காக அரசு வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரை பெறப்பட்ட வகைக்கு அரசு வழக்கறிஞர் திரு. கே. பாலசுந்தர், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நான்குநேரி அவர்களின் கேட்பு படி ரூ.10,000 வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
<tr><td>31.10.2023</td><td>379</td><td><u>பொருள் எண். 13</u><br>களக்காடு நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான Tied Grant ஒதுக்கீட்டின்படி ரூ. 39.70 லட்சத்திற்கான பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து தேர்வு செய்யப்பட்ட கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள 04.10.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல்/ குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">Supply and Installation, Commissioning of 800-1000Kgs/hour Shredding Machine with panel Board and controller in MCC compost yard at Kalakad Municipality.</td><td rowspan="2">9.60</td><td>M/s Sri Sai Industry, Chennai.</td><td>0.33% கூடுதல்</td></tr>
<tr><td>M/s Health care Technology, Chennai.</td><td>மதிப்பீட்டு விலைக்கு</td></tr>
</table></td><td>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | Supply, Installation and commissioning of Vibrator machine (Manure screening purpose) of size 8x4 with 3 HP motor in Mcc compost yard at kalakad Municipality | 3.60 | M/s Health care Technology , Chennai. | மதிப்பீட்டு விலைக்கு |
| | | | M/s Sri Sai Industry, Chennai. | 0.28% கூடுதல் |
| 3. | களக்காடு நகராட்சி வார்டு எண்.2, மஞ்சுவிளை சர்ச்தெரு முதல் காமராஜ் நகர் வரை கழிவு நீரோடை மற்றும் சிறுபாலம் அமைத்தல். | 13.80 | A. இராதா கிருஷ்ணன் | 0.02% குறைவு |
| | | | திருமதி. என்.எம். புஷ்பம் | 1.10% கூடுதல் |
| 4. | களக்காடு நகராட்சி வார்டு எண்.6, வடமலை சமுத்திரம் பகுதியில் கழிவு நீரோடை அமைத்தல். | 12.70 | திருமதி. என்.எம். புஷ்பம் | 0.07% குறைவு |
| | | | A. இராதா கிருஷ்ணன் | 1.03% கூடுதல் |

**அலுவலக குறிப்பு:**

மதிப்பீட்டினை விட குறைவாக/மதிப்பீட்டு விலைக்கு ஒப்பந்தம் வழங்கிய ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தங்களை மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 31.10.2023 | 380 | **பொருள் எண். 14**<br>களக்காடு நகராட்சி குடிநீர் திட்ட பணியான இளவடியான் கால்வாயில் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி கிணற்றுக்கு புதிய மின் இணைப்பு பெற மின் வாரியத்திற்கு விண்ணப்ப கட்டணம் மற்றும் பதிவுகட்டணமாக ரூ.65945/- செலுத்த கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையினை | அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | சம்பந்தப்பட்ட மின் வாரிய பிரிவு அலுவலகத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் வரவு செலவு நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | |
| 31.10.2023 | 381 | **<u>பொருள் எண். 15</u>**<br>களக்காடு நகராட்சியில் மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்படும் நகராட்சி தொடக்கப்பள்ளி, கீழக்கருவேலன்குளம், நகராட்சி நடுநிலைப்பள்ளி, களக்காடு, அரசு ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளி, சிவசண்முகபுரம் ஆகிய மூன்று பள்ளிகளில் மேற்படி திட்டத்தின் கீழ் காலை உணவு பரிமாறும் தன்னார்வலர்களுக்கு மாதம் தோறும் 1500/- மதிப்பூதியம் வழங்கவும், மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 17404/2022/எம்1, நாள். 29.05.2023ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>சம்பந்தப்பட்ட தன்னார்வலர்களுக்கு அனுமதிக்கப் பட்டுள்ள மதிப்பூதியம் வழங்க மன்றம் ஒப்புக்கொள்ளலாம், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |
| 31.10.2023 | 382 | **<u>பொருள் எண்.16</u>**<br>களக்காடு நகராட்சி குடிநீர் திட்ட துணை விதிகள் திருத்தம் தொடர்பாக மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யும் வகைக்கு அரசு அச்சகம், மதுரை கிளைக்கு ரூ. 3600/- செலுத்த சம்பந்தப்பட்ட அச்சக துணைப்பணி மேலாளரால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |
| 31.10.2023 | 383 | **<u>பொருள் எண்.17</u>**<br>களக்காடு நகராட்சியில் பொது சுகாதார பணியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள், ஓட்டுநர்கள் ஆகியோருக்கு 2023-2024 நிதியாண்டிற்கு சீருடை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலக குறிப்பு:</u><br>மன்றம் அனுமதிக்கலாம். தகுதியான அலுவலக பணியாளர்களுக்கு அரசாணையில் அனுமதிக்கப்பட்ட அளவில் தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரிய நிறுவனத்தில் பெற்று வழங்க அனுமதிக்கலாம். இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | |
| 31.10.2023 | 384 | <u>பொருள் எண்.18</u><br>களக்காடு நகராட்சியில் பொது சுகாதார சட்டத்தின்படி மலக்கசடுகளை அகற்றும் பணிக்கு தனிநபர்களை ஈடுபடுத்தக்கூடாது என்பதற்கான சட்ட அறிவிக்கையினை தின சூரியன் நாளிதழில் விளம்பரம் செய்யத வகைக்காக மேற்படி நாளிதழின் பட்டியல் தொகை ரூ. 15000/-ஐ செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |
| 31.10.2023 | 385 | <u>பொருள் எண்.19</u><br>களக்காடு நகராட்சிக்கு தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2022-2023 திட்டத்தின் கீழ் கீழப்பத்தையில் ரூ. 100.00 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 7628/2022/எம்எ1, நாள். 09.10.2023ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>மன்றம் பதிவு செய்யலாம். | பார்வையிட்டு அனுமதிக்கப் பட்டது. |